உ



அமரர்

# சிவராசா விநோதினி

மறைவை நினைவு கூரும்

# நினைவு மலர்

17.12.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பூநகரி நல்லூரைப் பிறப்பிடமாகக்
கொண்டவரும், விம்பிளி இலண்டனை
வதிவிடமாகக் கொண்டவருமான

அமரர்

# திருமதி. சிவராசா வினோதினி

அவர்களின்

மறைவை நினைவு கூரும்

# நினைவு மலர்

**17.12.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

எம்முடன் இருந்து
எம்முடன் இணைந்து
எம்முடன் கலந்து
எம்முடன் சிறந்து
எம்மைவிட்டு மறைந்த
எம் குடும்ப விளக்கு
எம் தாய் தெய்வத்திற்கு
எம்மால் ஆன இந்த
எம் சிறு நூல் சமர்ப்பணம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# சிவராசா வினோதினி

தோற்றம்
1987.10.12

மறைவு
2022.11.16

## திதி வெண்பா

ஆண்டு சுபகிருது ஆகிவரும் ஐப்பசியில்
பூண்ட அமரபக்க அட்டமிதான் - நீண்ட புகழ்
காண்ட வினோதினிப் பேராள் காவுடலம் நீத்து
மாண்ட திதி என்று மதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

### வெண்பா

நகரி மேவி புரிசடையோன் புத்திரனாய்
ான நகர் காக்கும் கணநாதா - தேனமிர்த
சொல்லாள் விநோதினியின் சோகநிலை நான் பாட
வல்லமையை தந்தருள் வா.

### தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பானீக்கி
நுழை தரு நூலினர் ஞானங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனான் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கற்பனைக் கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோகமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்குழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞான மொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்
ஆதி அருணாசல மமர்ந்த பெருமாளே.

## கந்தரலங்காரம்

சளத்திற் பிணிபட் டசட்டு க்ரியைங்குட் டவிக்குமென்ற
னுளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா யுணவ ருரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேல் தொட்ட காவலனே.

ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொ ராநந்தத் தேனை அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப்பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பியவா, முகமாறுடைத் தேசிகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரானடி போனார்
பெறுதற்கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற்கரிய தோர் பேறிழந்தாரே.

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

## பட்டினத்தார் பாடல்

பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்
தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கும், மறந்தன உணரும்
புணர்ந்தன பிரியும், பிரிந்தன புணரும்

இன்பமும் துன்பமும் இருநிலத்து அருந்தினை்
ஒன்றொன்று ஒழியாது உற்றனை அன்றியும்,
புற்புதக் குரம்பைத் துச்சில் ஒதுக்கிடம்
என்னநின் றியங்கும் இருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாகக் கருதினை் இதனுள்

## வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி சிவராசா வினோதினி
## அவர்கள்
## வழிபாடு செய்த தெய்வங்கள் மீது
## வேண்டிப்பாடிய வேண்டற் பாக்கள்

காப்பு

வல்ல கணபதியாய் வதி பூவின் நகரில் உறை
எல்லாரும் போற்றும் எம் இறையே – நல்லவளாய்
செல்லுவினோதினியாள் தெய்வம் பராவு கோயில்
சொல்ல மனத்திடையே தோற்று.

**1) பூநகரிப் பிள்ளையாரை வேண்டிப் பாடியது**

பூநகரி நல்லூரில் பொலிந்த நில பூமியினில்
புனிதமான
வாரணத்து தேவனதாய் வதிந்துறையும் எங்கள்குல
தேகத்து சீர் வளம்சேர் நாதார்சொல்லாள்
தேவி வினோதினியானாள் தேகம்விட்டு
வானகத்து வருகின்றாள், வந்து உன்தன் வளைக்கரத்தால்
வணக்குவாயே.

பூநகரி பிறந்த நங்கை புகுமிடமாய் இலண்டனது
கொண்ட மங்கை
கானமயில் போன்றவளைக் கண்ட நோய் தின்றுவிட்ட
காசினியின் வாழ்வு
போதுமென் இடைவிட்டு பொலிந்த உடல் இவன் வைத்து
புனிதா உன்தன்
தேனமிர்த சேவடியில் சேரவென வருகின்றாள்
சேர்த்துக் காப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2) பூநகரி அம்மாளை நினைத்து வேண்டிப் பாடியது**

அன்னையாய் உலகமெல்லாம் ஆக்கியே காப்பவளே
அமைந்த கோயில்
உண்மையாய் உறைபவளே உத்தமியே ரத்தினமே
உலகவாழ்வு
வண்ணமாம் மாயமென வனையுடலம் இங்கு வைத்து
வனிதையான
கண்ணனைய விநோதினியாள் வருகின்றார் காத்து உந்தன்
பாதம் காட்டே.

அன்பான கணவர்விட்டு அகம் மகிழ்ந்த மக்கள் விட்டு
இன்பான உறவுகளாம் எல்லாமே விட்டுவிட்டு
துன்பான நோய் கொள்ள, தூயவளே துணையாக
உன்பாதம் இணைவாளை உனது மடி சேர் தாயே.

**3) பூநகரி வைரவர் பெருமானை நினைத்து வேண்டிப் பாடியது**

குலதெய்வ வைரவரே கும்பிட்ட குலநங்கை
குணத்தின் மேலாள்
கலமதிலே காகமதாய் கதியொன்றும் அறியாளாய்
கவலை னொண்டு
பலமதிலே நோய் கௌவபகர் உடலம் இங்கு வைத்து
பதியை நீத்து
வலமதிலே வருகின்ற வனிதை விநோதினி
வந்து காப்பாய்.

சூலத்தின் திருவடிவே சூர் நாயின் வாகனனே துணையதின்றி
காலத்தின் நோய் கௌவகாவுடலம் இங்கு விட்டு வருகுவாளை
சீலத்தின் திருவாளை சீர்நங்கை விநோதினியை உன்பாதம் சேர்த்து
பாலத்தின் இணைப்பாக பார்த்து அருள் செய்திடைய வைரதேவா

**ஆக்கம்: கலாபூஷணம் குடாநீரூரான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைச் சரிதம்

ஈழத்திருநாட்டின் நித்திலமாய் விளங்கும் வன்னிப் பெருநிலத்தில் நாடி வந்தாரை வளமுடன் வாழ வைக்கும் பூநகரி நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட கேதீஸ்வரன் சரஸ்வதிஅவர்களின் இரண்டாவது புத்திரியாக 12.10.1987 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் வினோதி அவர்கள் பிறந்தார். இவரின் உடன்பிறப்பு அக்கா கௌசி, யசோ, கிரிக்ஷா, சாந்தி ஆகியோரின் அன்புத் தங்கைகளும் ஆவார். இவர் தனது இளமை காலத்தில் இலங்கையில் சாமிப்புலம் நல்லூர்ப் பாடசாலையில் ஆண்டு ஒன்று தொடக்கம் ஐந்தாம் ஆண்டு வரை கல்வி பயின்றார். அதன்பிறகு பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தில் ஆறாம் ஆண்டு தொடக்கம் பத்தாம் ஆண்டு வரை கல்வி பயின்றார். அதன் பிறகு வவுனியா பூந்தோட்டம் என்ற இடத்தில் குடிபெயரந்தார். பிறகு ஒரு வருடம் வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றார். கல்வி, விளையாட்டு துறையிலும் சிறந்து விளங்கி உள்ளூர் விளையாட்டுக்களிலும் பங்குபற்றி அவர் பல பதக்கங்களையும் பெற்றார். கொடிய நோய் வந்தபொழுது வணங்கும் தெய்வங்களும் அவரை கைவிட்டுவிட்டன. இதனால் அவர் 16.11.2022 அன்று அவர் தனது கணவர் குழந்தைகள் உடன்பிறப்புக்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரையும் விட்டு இப்பூவுலக வாழ்வை முடித்துக் கொண்டார். இவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி சிவராசா வினோதினி அவர்களின் மறைவு குறித்த கையறு நிலைப்பாடல்கள்

### கணவர் திரு த. சிவராசா புலம்பல்

அன்பிற்கினியாளே ஆருயிரே அருந்துணையே
இன்பிற் சிறந்தவளே என்னவளே என்னைவிட்டு - என்னை
துன்பிற்று வளவிட்டு தூரதேசம் சென்றனையே
என்பிற் தனிவாழ்வு இடர் தந்தாய் ஏங்குகிறேன்.

கைப்பிடித்த நாள் முதலாய்
கைகளுக்குள் எனைக்காத்து
எப்பிறவி வந்தாலும்
இணைபிரியேன் என்று மதி
செப்பி இருந்தனையே
சேர்ந்து வந்த நோய் கொள்ள
இப்பிறவி நீத்து
எனை மறந்து சென்றனையே.

### அருமை மகன் துஷாந் புலம்பல்

நோயாகி உடல் நொந்து நொடித்தபோதும்
நூறாக நுளைந்ததுயர் உற்றபோதும்
தாயாகி நின்றெம்மை தாங்கி நிற்ற
தயாபரியே தனித்தென்னை புலம்பவிட்டு
ஓயாத உறும் துயரம் உளத்தைத் தாக்க
உயரத்தில் பறந்தனையே உருமை கொண்ட
சேயாகி என்செய்வேன். செப்பாய் அம்மா
திகைத்து மனம் அழுகின்றேன் ஆற்றவாராய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புதர ஆயிரம் பேர் இருந்தாலும் அம்மாப்போல்
இன்புதர முடிந்திடுமோ, என்னைப் பெற்று
துன்பறியா எனை ஆண்ட துணையே தாயே
உன்பாலே ஏகினாயே, உளம் கலங்கி உருகுகின்றேன்.

## மகள் சஞ்சனா பிரலாபம்

அம்மா என்றழைத்த குரல் அடங்கிப் போச்சு
ஆற்றொணாத் துயர் வந்து அமர்தலாச்சு
நம்மாள்தான் எத்தனைதான் வந்த போதும்
நமது அம்மாபோல் வருமோ நம்மைக்காக்க
எம்மாவி என் உடலம் எல்லாமாகி
இருந்தவளே எமைவிட்டு நீண்டதூரம்
உம்மாவிதனை கொண்டு சென்றிட்டாயே
உறுதுயரம் மாறிடுமோ உரையாய் அம்மா.

## மகள் கீஷானா புலம்பல்

எமைப் பெற்று ஆளாக்கி எல்லாம் செய்து
என்னுள்ளே தெய்வமாய் இருந்த தாயே
உன்னை இனிப் பெற்றிடுதல் முடியுமோ தான்
உரையாயே, உயர் தூரம் மறைந்து சென்றாய்
துன்பமது தந்தனையே துவளுகின்றோம்.
தூமணியே என்முன்னே தோன்றுடாயோ
எண்ண மனம் பதறுகிறேன் என்ன செய்வேன்
ஏங்கி மனம் அழுவதல்லால் ஏது செய்வேன்

## தாயார் தேவி, தந்தை ஈசன் பிரலாபம்

பெற்றிட்ட நாளதனில் பெருமை கொண்டு
பெண்குலத்து திலகமென உனை வளர்த்து
உற்றவனின் கரம் கொடுத்து உன்னைக் காக்க
உறுதுணையாய் வைத்து மகிழ்ந்திருந்தவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றவத்து நாயகியாம் உன்னைவிட்டு
நாம்வாழ விதியாச்சோ நமது செல்வி
சுற்றமெல்லாம் மறந்து நீ சோதியாகி
சுமந்தவர்கள் தமை மறந்து சென்றிட்டாயே.

அன்பு மகளே அணையா திருவிளக்கே
இன்ப உருவே எம்முள் இணைந்தவளே
துன்ப உருக்காட்டி துயரில் நாம் வீழ்ந்து பட
என்பும் ஒடியிட்டு ஏகி மறைந்தனையே.

## சகோதரிகள் புலம்பல்
## கௌசி, யசோ, கிரிசா, சாந்தி

உடன்பிறந்த நாங்கள் உன்வாழ்வு மகிழ்வு கண்டு
திடம் படவே நமக்கின்றோர் சோதரி உள்ளாள் என்று
மடம் கொண்ட மனத்துடனே மகிழ்ந்துமே நாமிருக்க
உடம் பதிர ஒரு செய்தி உனை இழக்க வந்ததுவே.

நேற்றுவரை எம்குலத்து முற்றம் தன்னில்
நிறைவாக பூத்திருக்க மலரில் ஒன்று
கூற்றுவனின் கரம்பட்டு கொடிய நோயால்
கொன்றுவிட, கூடி நாம் பிறந்த பேர்கள் இன்று
வேர்த்து மனம் விறைப்பாக விழுமம் கொண்டு
வீழ்ந்து மண்ணில் புரண்டு அழவிதியுமாச்சோ
கார்த்து எமை நிற்கின்ற கடவுளானே
கரம்கூப்பி தொழுதாளை கவரலாமோ.

## சிவராசா மாமா குடும்பம் புலம்பல்
## சுப்பிரமணியம், சின்னராசா

மருமகளாய் காணவில்லை மகளாக பார்த்திருக்க
உருமாறி நோய் கொள்ள உறவுகளை உதறிவிட்டு
அருவாகி மறைந்தனையே அன்புநிலை மருமகளே
உறவாய் நாம் கதறுகிறோம் ஒருமுறை நீ வாராயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா என நீ அழைத்தால் மனங்குளிரும் உறவான
ஏமாநீ எமை மறந்து எமனுடனே சென்றிட்டாய்
ஆமா நாம் அலறுகிறோம் அன்புசால் மருமகளே
நாமாக ஏது குற்றம் நம்மைவிட்டு நகர்ந்தனையே.

## சித்த சிகாமணி மாமா குடும்பம் பிரலாபம்
## கணேசலிங்கம்

மருகியாய் வந்து மனங்களிப்ப எமை ஆக்கி
உருமையாய் உறவாகி உற்ற எங்கள் மகளாகி
பெருமையாய் எமையாண்ட பெண் அரசே எமை நீங்கி
அருவமாய் மறைந்தனையே ஐயோ நாம் என் செய்வோம்.

நம் நாடு விட்டு நகர் லண்டன் வதிவாகி
எம்நாடு உற்றோர் ஏற்றமாய் பேசிவிட
அம்நாடு போற்ற அகல் விளக்காய் ஒளிவீசி
உம்நாடு உற்றார் உறவும் அணைந்ததுவோ

## சுந்தரலிங்கம் மாமா குடும்பம் புலம்பல்
## நாகராசா
## விமலச்சந்திரன்

அன்பு மருமகளாய் அணையா விளக்காகி
என்றும் ஒளிர்வாய் என நாம் நினைத்திருக்க
பொன்றும் துயர்ச் செய்தி புலம்பி மனம் குழற
சென்று மறைந்தாயோ செப்பாய் மருமகளே

குடும்பத் திருவிளக்கு கோபுரத்து தனி விளக்கு
இடும்பை தவிக்கும் எங்கள் குல விளக்கு
கடும் நொடிய நோயால் காலம் முடிந்ததுவோ
சுடும் துன்பத்தாலே துவழ்கின்றோம் மருமகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடராசா மாமா குடும்பம் புலம்பல்
## சந்திரகுமார், ரமணன், ஈசா, சின்னராசா, நாதன் சித்தப்பா

ஊருக்கு ஒரு ராணி உறவுக்கு திரு ஏணி
நாருக்குள் காக்கும் நல்ல பூவின் நறுமலராய்
பேருக்கு வாழாது பெருமை கொண்ட நல்மகளே
தேருக்கு சில்லாக சிறந்தாய் மடிந்தனையே

உற்ற துணை நீ உயிர் நீ உணர்வும் நீ
சுற்றமும் நீதான் என்று சொந்தங்கள் நாமிருக்க
வற்றல் தரும் நோயால் வடிவிழந்து நீவாடி
செற்று மடிந்தனையே தேம்பவிட்டு சென்றனையே.

## மைத்துனர்மார் புலம்பல்
## சிறி, ரமேஸ், ஜெய்

அண்ணாவுக்கேற்ற அண்ணியாய் நீர்வந்து
எண்ணா மனதில் இணைந்த அன்புத்தாயானாய்
மண்ணாசை நீத்து மனை சுற்றம் தான் விட்டு
விண்ணாகி மறைந்தனையே வேதனையில் தவிக்கின்றேன்.

வாழும் வயதில் வாட்டுகின்ற நோயதனால்
நாளும் வருந்தி நலிவுற்று நமை மறந்து
ஊழம்வினையும் ஒருங்கே உமைக்கூட்டி
வீழும் விதியில் விழுந்து மறைத்ததுவோ.

## பெறாமக்கள் பிரலாபம்
## அக்ஷயன், மிதுஷா, கேஷ்வின், யனுரஷா

பெற்ற மக்கள்போல பேணி எமைக்காத்து
உற்ற நம்தாய்போல் உலாவந்த நம்தாயே
வெற்றுடலம் விட்டு விரைந்துமே விண்ணேகி
செற்று மடிந்தனையே செய்வதொன்றும் அறியோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பிற்கினிய ஆசை கொண்ட சித்தி என
எண்ணித் துணிந்திருக்க எமைவிட்டு நீர் ஏகி
துன்பிற் காக்கவிட்டு தூரதேசம் சென்றீரே
என்பிற் கலந்தவளே ஏது நாம் செய்வோமே.

## மறுசகோதரர்கள் பிரலாபம்
## அரவிந்தன்(கனடா), தர்மதாஸ் கிருஸ்ணன்(லண்டன்), குணபாலன்

உடன்பிறந்த சோதரம் போல்
    ஓர் நாளும் நலன் கேட்பாய்
இடம் வந்து உதவிநின்றாய்
    இப்படித்தான் முடியுமென்று
நிலைக்கவில்லை
    திடமாக நீ வாழ்வாய் என்றே நினைத்து
நாமிருந்தோம் எட்டாத தூரமது
    ஏன் சென்றாய் சோதரியே
ஏற்கமனம் மறுக்கிறதே என் செய்வோமே.

## பெறாமக்கள் பிரலாபம்
## விதுசன், சானுயன், அபர்ணா, அபிஷா, அதிசயா, சாஷ்மிதா

பெற்ற அன்னை போலெம்மை ஆதரித்தீர்
பேறு பெற்றோம் நீர் கிடைக்க என்றிருந்தோம்
பெருமித்து நானிருப்பேன்
படியுங்கள் என்றுரைத்தீர்
ஒருமித்து அழவிட்டு எங்கு சென்றீர் தாயாரே

## பெறாமக்கள் பிரலாபம்
## அனன்யா, அகரன், நிசானி, யதுர்சன், யதுகரன்

மாறாத அன்பு கண்டோம் உம்மிடத்தில்
மறுக்காத பண்பு காண்டோம் உம்மிடத்தில்
தாயாகி நின்ற உங்கள் நிலையும் கண்டோம்
சேய்களையும் விட்டு சென்ற மாயமென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதாத காலமது நோயாய் வந்தது
வாழ்வில் இனியெப்போ காண்போம்
கண்கலங்க விட்டெங்கே சென்றீர் ஐயோ.

### மச்சான் மச்சாள் மார் பிரலாபம்
### தங்கராணி, புஸ்பராணி, விஜயராணி, மஞ்சுளாதேவி

மலர்ந்த முகம், மட்டில்லா பாசம்
மாசற்ற உன்நேசம்
மறக்குமோ எமக்கு
சின்ன வயதில் ஏனிந்த அவசரம்
உன் பிஞ்சு மக்களை ஏன் மறந்தாய்
இறைவனுக்கு உன்னில் அத்தனை
பிரியமா சென்றுவிட்டாய்
தேற இங்கு வழிகளில்லை
தேம்புகின்றோம்.

### மைத்துன மைத்துனியர் பிரலாபம்
### தவராசா, செல்வராசா, பாஸ்கரன்

எடி என்ற சொல்லில்லா எம்மோடு
இணைந்திருந்தாய் குடிக்கொரு
தவமகளாய் தானிருந்தாய் மைத்துனியே
படிக்கல்லாய் இருந்துவிட்டு
பறந்தோடி ஏன்சென்றாய் பாலகரை
தவிக்கவிட்டு வெடிக்குதையோ
இதயமது புலம்புகின்றோம்
வேறென்ன செய்வோம் நாம்

### இராசரத்தினம் பவாதேவி பிரலாபம்

பொன்னோடு புகழ்தேடி பிள்ளை செல்வம்ஈந்தே
ஊர்உலகில் சான்றோராய் வாழவகை செய்தீரே
தன்மானத்தோடே உற்றார் உறவுகளும் நலம்பெறவைத்தீர்
யார்உளரோ இனிஎமக்கு ஆறுதல்தான் கூறுவாரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்கள் பிரலாபம்

நெஞ்சிருக்கும் வரை உந்தன் நினைவிருக்கும்
கொஞ்சி மகிழ்ந்துண்டு கூடிக்களித்ததெல்லாம்
கொஞ்சமோ கெஞ்சியினிக் கேட்டாலும்
உன் சுவைப்பேச்சு கேட்பதெப்போ
உன் நினைவுகள் நித்தம் வந்தெம்மை
நெகிழ்ந்தெடுக்கும் சென்றுவா நண்பியே.

## உற்றார் உறவினர் புலம்பல்

எல்லாவற்கும் நல்லவள் நீ
இசைந்த அன்பால்
ஏற்றம்பெற வைத்தவள் நீ
எங்கள் சுற்ற
வல்லவளாய் வாழ்ந்தவள் நீ
வதிந்த பேற்கு
வாகன உதவிபுரி
வனிதையும் நீ
நல்லவளாய் உற்றவள் நீ
நடுவில் விட்டு
நமை மறந்து சென்றனையே
நாதி யற்று
எல்லோரும் புலம்புகிறோம்
எம்மைச் சேர
ஏங்கி மனம் கலங்குகிறோம்
எங்கள் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரவர்கள் புலம்பல்

ஊருக்கு உத்தமியாய் உதவி செய்து
உயர்ந்தவளே உற்றங்கள் கலங்கவிட்டு
வேருக்கு விழுதாக விளங்கும் வேளை
விதி வசத்தில் விழுந்துடலம் வீந்திட்டாயோ
பாருக்குள் வாழ்வுதனை இடையில் விட்டு
பாதியிலே மறைந்தனையே
பாவை உன்னை
நாத்தளர்ந்து புலம்புகிறோம் நங்கை பாராய்.

## தேற்றம்

பிறந்த உடல் இறப்பதுதான்
பேசும் உண்மை
பித்தனாய் அழுவோரும்
போவது உண்மை
சிறந்தவரும் தேர்ந்தவரும்
அழிதல் உண்மை
சீர்த்த மகள் விநோதினியும்
செயல் முடித்து
சீரிறைவன் சேவடிக்கே
சேர்ந்தாள் உண்மை
ஆர்த்தழுவார் மனந்தெளிந்து
ஆறுவீரே
ஆண்டவனார் வகுத்த விதி
அழுதா மாறும்.

ஆக்கம் : **கலாபூஷணம் குடாநீருரான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கண்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குத்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க்கன்பார்யாம் ஆர் ஏலோர் எம்பாவாய்

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம்புன்மை தீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமையெல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேதவிழுப் பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட் டோம் நீயேவந்
தெண்ணிக்குறையில் துயில் ஏலோர் எம்பாவாய்

மால் அறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய்

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல் பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெகொப்பாய்
என்னானை என்னரை யனின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீதென்ன உறக்கமோ வாய்திறவாய்
அழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுத விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆர்உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்

மொய்யா தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
புத்திகழும் பொய்கை குடைத்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழா மாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவாநெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள்
பேரரையற் கிங்கனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னைச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன் அருளே
யென்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்ப
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நினதன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல்பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில் என் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் தோற்றமாம் செந்தளிர்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் இனிய சோதரியே வினோம்மா. ஆசையாக உன் பெயரை அழைக்கும் அக்கா நான் புலம்புகின்றேன்.**

சின்னஞ்சிறு வயதில் ஒன்றாக இருந்து
ஒன்றாக வளர்ந்தோம்.
கள்ளங்கபமமற்ற உனது பேச்சும்
அனைவரையும் கொள்ளை கொள்ளும்
மனதும் கொண்ட இனிய சோதரியே
இரணைமடுவில் அத்தை வீட்டில்
நின்று படித்த நாட்கள் எத்தனை?
அத்தோடு பூநகரி நல்லூரில் பெரியம்மா
வீட்டில் படித்த நாட்கள் எத்தனை?
சின்னஞ்சிறு குறும்புகளும் சேட்டைகளும்
விட்ட நாட்கள் எத்தனை?
பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தில் படித்தோம்
ரியூசனுக்கும் ஒன்றாக சென்றோம்.
இடைக்கிடை சண்டைகளும் செய்தோம்.
அது ஓர் அற்புதமான காலம் ஆனால் எனக்கு நீயும்
உனக்கு நானும் என்ற நம்பிக்கையை வளர்த்து
விட்டேன். வினோம்மா... வினோம்மா... என்னை
தவிக்க விட்டாயே எங்கே சென்றாய் சொல்லம்மா...

கரடான பாதை பல கடந்து நல்ல பாதையில்
பயணிக்கும்போது உன்னை இழந்து
துடிக்கிறேனம்மா இதயம் இன்னும் பாசத்தில்
தொட்டுவிடத் துடிக்கிறது. என் செல்லமே தங்கமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி உன்னை எங்கு காண்பேன்.
எம் சொந்த மண்ணை விட்டு வெளிநாடு என்ற
போர்வைக்குள் வந்தோம். அங்கும் எம் அன்பு
குறையவில்லையம்மா - ஆனால்
என் சொந்த மண் என் தங்கை எங்கே?
பாரபட்சமில்லா பாசக்காரி ஊரோடு உறவாடும்
உத்தமி வெகுளித்தனத்துக்கு நீ ஒரு சாட்சி.
வீண்வம்புக்கு வித்தகி தவறாகப் பேசாத
பசுங்கிளி எங்கே? என்றெல்லா
கேட்குமம்மா நான் என்ன செய்வேன்.
எதை உரைப்பேன் சொல்லம்மா
வைத்தியசாலையில் எனக்கொரு
தொலைபேசி அழைப்பு... பதற்றத்துடன்
எடுத்தால் என் பிள்ளைகளை வீட்டை
கூட்டிக்கொண்டு போய் வைத்திரு அக்கா
உணவூட்டி சந்தோசமாக வைத்திரு
நான் நீண்ட நாட்கள் உன்னுடன்
இருக்கமாட்டேன்... ஐயோ என்ன
கொடுமை யாருக்குச் சொல்வேன்.
இறைவனிடம் இரந்தேன் தெய்வங்கள்
விடை தரவில்லை ஓடோடிச் சென்றேன்
என் தெய்வத்தைப் பார்க்க கைகூப்பினாள்.
அக்காவை வரவேற்றாள் அழுதேன் புலம்பினேன்
என் வினோம்மாவை மீட்க முடியவில்லை
என் செய்வேன்... காலத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமையா? துடிக்கிறேன் உன்னைக் காண
முப்பத்தைந்து வயதினிலே மிடுக்காக திரியும்
வேளை உடல் நொந்து உறவிழந்து தனியாகச்
சென்றாயே.
என் தங்கமே அக்கா தவியாய் தவிக்கின்றேனடி
உனது கதை நீண்டது தொடரமுடியவில்லை
யம்மா அழுகைதான் எனக்கு இனி மிச்சம்
முடிக்க முடியாமல் முடிக்கின்றேனடி என்
தங்கம்.

**உன் அன்பு அக்கா (கௌசி)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் சின்ன அக்கா (வினோ) உன்னை அக்கா என்று கூட்டதை விட செல்லமாக பெயர் சொல்லி அழைத்ததுதான் அதிகம் என் உயிர் அக்காவே. நான் உன்னை எவ்வளவு முறை அக்கா அக்கா என்று கூப்பிட்டாலும் அது உனக்கு கேற்கின்றதா என்று கூட எங்களுக்கு தெரியாத தூரம் சென்று விட்டாய். நீ இறுதித் தருணத்தில் நீ பட்ட துன்பத்தில் உனது அருகிலிருந்து ஆறுதல் சொல்லக்கூட என் மனதில் தைரியம் இருக்கவில்லை அக்கா. அக்கா நீ நோயினால் துடிக்கும் போது நானும் உன்னுடன் சேர்ந்து துடித்தேன்அக்கா.

ஆனால் நீ அனுபவித்த துன்பம் கொடுமைக்கு மேல் கொடுமை அக்கா. நீ எங்களோட அம்மா வீட்டிலிருந்து பிள்ளைகளுக்காக வேறு வீடு சென்றாய். நாங்கள் சிறிதளவு கூட நினைக்கவில்லை. எங்களை விட்டு நிரந்தரமாக இவ்வுலகை விட்டு சென்றுவிடுவாய் என்று அக்கா.

எனக்கு என் செல்லங்களான உன் பிள்ளைகளை (துசாந், சஞ்சனா, கிசானா) தூக்கி விளையாட கொடுத்தாய் அக்கா. நீ என் அக்கா மட்டும் இல்லை. நீ எனக்கு இன்னொரு அம்மாவாக நினைத்து இருந்தேன் அம்மா.

நீ இல்லை என்று என்பதை நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை. ஏன் என்றால் நீ எங்களோடதான் இப்பொழுதும் வாழ்ந்து கொண்டு இருப்பதாய் நாங்கள் உணருகின்றோம். நீ எனக்கு செய்த எல்லா உதவிகளுக்கும் மிக்க நன்றி அக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா நடந்தது எல்லாம் ஒரு கனவாய் இருக்கக்கூடாது என்று எங்கள் மனது ஒவ்வொரு நொடிப் பொழுதும் ஏங்குகின்றது.

எப்பொழுதும் உன் நினைவுடன் தவிக்கும்

**உன் தங்கை**

**கிரிஷா ஜெசீரன் மற்றும்**

**ஜெசீரன், ஐதுசுஷா.**

---

I love you mum and I am grateful for you to be my mum. You're the best I could ever have and ask for. You looked after me so well and you told me to study and I will and will become a doctor or scientist. I love you mum and at the end of the day you are still with me in my heart.

With love, Thusanth



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

En anpulla vino akka eandi engalai vidduddu ponanai..nee illama romba kastama eukkuthu. naanga 5 perum orutharukku oruthar viddu kodukkama eppidy erunthoom ippo nee illama romba kastama erukkuthu.normal la every Saturday Sunday call panni thane ellarum amma veeda povoom..ippo unakku call panna mudiyathu ella?..ippo nee engalooda vara maddai Ella?..anaalum nee engalooda thaan erukkai enru oru unarvu erukkuthu.. eppidy yaavathu intha kodiya noyil erunthu thirumba engalidda vanthuruvai endu kadaisi nimidam kooda nampikkaijodu eruntham..kadaisi varaikkum Antha kodiya noiyodu poradinaai aana antha noi unnai ventru viddathu paavam dii nee evvalavu vethanaiya ulle vaichsu kiddu veliya srichsikkidu eunthai. .nee padda valigalai ennala marakka mudiyalai..antha kadaisi eravu unkooda erunntha pothu enna parthu oru srippu pannije antha punnagai ippavum en kannukkulla erukkuthadii..piraku oru kelvi keddai enakku ennadi aachsu ennnu athukku nan enna sollurathu endu theriyama erunthen. Pirakuku ean nee enga erukkirai enru kedaai..ean enna enakku unna romba pidikkum akkachsi.. aana antha saamikku unna romba romba pidichsiddudadii. kaalai 4 manikku kaakam karaiya en kannil erunthu kannir oduchchu..appave ennai vidduddu poi iruvaaiyo enndu payama erunthuchu. aana ippo ennai vidduddu romba thoorama poittai ella. kadavulukku kooda kan illama poittu ella..ippo kadavul illai enra nampikkaije enakku vanthidduchu. inime enra veedila nan

vilakku eattha maddan..romba kastamaha erukkuthadi akkachsi...akka thirumba vavaan dii, palaya mathiri naanga 5 perum onna eruppam..please

Marakka mudiyatha ninaivum NEETHAN.. Verukka mudiyatha Uravum NEETHAN..

Nee enakku akka maddum illamal en tholiyavum eunthai..

Enrum un ninaivil un thangai yaso,

ramesh, uthish and keshvin..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Vino akka, nee enakku ennoru ammvai irunthai.

Eppoluthellam amma veetil illaiyo, appoluthellam nee thaan ennai paarthu kondai. Aanal ippoluthu enkalai thaniyaka viddu sorga vaasal sentru viddai. Unkooda thodagathil hospital ponathila irunthu kadasi varai naan un kooda irunthirukken. Kadantha moonu varusama nee padda kastam, thumpam, vethanai ellam paathirukken. Enkidda nee 'valikuthadi' endu sonnathum, naan 'poruthukko ellam sariya judum endu sonnan'. Aana nee 'ennum evalvu neram adi' endu sonnai. Piragu nee moochu vida kastappadapo naan odi vanthu unnai thadavi samalichan, antha nodi sonnai 'nee illai enda naan eppaiyo poi irupean' endu. Nee kadasiai kai eduthu kumpuddu 'porean bye' endu alllarukkum sonnai. Ithu eppdi valichuchu therijuma? Unnoda kudumapa vaalaki pullaikalodu thodanaga munbe, siru vayasil mutru pulli aakividdathu. En kadasi kalam varai intha ninaivugal ranamai en manasil pathinchirukkum. Nee enkalai viddu porappo, enakku maddum 'Thank you' sonnai. 'Thusanth, Sanchana, Kishana, Amma, Appava paathuko' endu sonnai. Kandippa, itha nee sollaamela naan seivean.

Nee illamaal engaludiya vaalaki verumai aakivitathu. Ainthu perai sernthu santhoshamai, koodu kudumbamai, kalakalappodu irunthom. Ippothu nee illai enru ninaikkum pothu valikirathu. Ini enna panaaalum, enna saathichalum, enkalala mulu santhosham adaiya mudiyathu. Nee illatha tharunangal eppavum enkalukku oru valiyai irukkum.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nee romba nallaval, paasama iruppa, allarijum anusarichu pova, yaar koodaijum sandaiyo vaaku vaathamo padamaadda. Allathukkum oru sirippu srichuttu iruppa. Athanala ennavo, intha koduramana ulagathil nee irukka koodathuendu kadavul theerpalithu viddar pola.

Enakku therijum nee enka kooda thaan eppoluthum iruppai endu. Naan Sanchanavidaum un vadivathai paakirean. Unnai enkaliddum irunthu pirichu sentra kadavul ini mel enakku thevai illai, ini mel nee thaan ennudaiya theivamai irunthu enkalai vali nadathi asirvathikanum.

Un nabagankal pokishamai pathinirukkum. Un nabagathil thanimai aakivdom.

Enrum unnudaiya kadasi thangai, Shanthy (Pirashanthini)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**கேதீஸ்வரநாதன் + சரஸ்வதி**

- கௌதமி + சிறிதரன் → அக்ஷயன், மிதுஷா
- வினோதினி + சிவராசா → துஷாந், சஞ்சனா, கிஷானா
- நளாயினி + ரமேஸ்குமார் → உதிஸ்ரா, கேஸ்வின்
- கிரிஷா + ஜெய்சீலன் → யதுர்ஷா
- பிரசாந்தினி

(லண்டன்)

**தங்கவேலாயுதம் + அன்னலட்சுமி**


- தவராசா + சிவமலர் → மிதுஷன், சானுஷன் (லண்டன்)
- செல்வராசா + கோமதி → அபர்ணா, அபிஷாஷ, அக்ஷயா
- சிவராசா + வினோதினி → துஷாந், சஞ்சனா, கிஷான் (லண்டன்)
- தங்கராணி + தர்மதாஸ்
- பாஸ்கரன் + ரஜிதா → சஷ்மிதா (லண்டன்)
- புஸ்பராணி + அரவிந்தன் → அனன்யா, அகரன் (கனடா)
- விஜயராணி + கிருஸ்ணன் → கிஷானி, யதுசன், யதுகரன் (லண்டன்)
- மஞ்சுளாதேவி + குணபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்ப விளக்கு அணைந்த செய்தி கேட்டு, அறிந்து ஓடோடி வந்து எம்முடன் கலந்து ஆறுதல் கூறி ஆதரித்த உற்றார் உறவினர், நண்பர்கள், ஊரவர்கள், தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்து கொண்டவர்கள், அந்தியேட்டி சபிண்டிகரண நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.



**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் கண்டு அஞ்சாதீர்கள்
நீங்கள் மகத்தான செயல்களைச்
செய்ய வல்லவர்கள்.
ஆனால் பயம் மட்டும் தோன்றுமாயின்,
அந்தக் கணமே செயலற்றவர்களாக
ஆகிவிடுவீர்கள்.
அச்சம் ஒன்றே இவ்வுலகிலுள்ள
அனைத்து துன்பங்களுக்கும் காரணம்.
மூட நம்பிக்கைகள் அனைத்திலும்
கொடியது இந்த அச்சமே.
இதுவே நம் துயரங்களுக்கு
மூல காரணம். பயமின்மையோ
ஒரே நொடியில் நமக்கு
சொர்க்கத்தையே அளிக்கவல்லது.

எனவே எழுந்திருங்கள்!
விழித்திருங்கள்!
இலட்சியத்தை
அடையும் வரையில் நீற்காதீர்கள்.

- சுவாமி விவேகானந்தர்



மாருதி பதிப்பகம் - நெல்லியடி.
0766914180

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org